Registered as a News paper in Ceylon விலை சதம் 10



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி * ★ National Tamil Daily
மலர் 9 [15-10-67] இதழ் 316
யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 29 றஜப் 10 ஞாயிற்றுக்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-1

# யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் உதவியுடன் தொழிற் கல்லூரி

## பண்ணைக்கு அருகில் அமையும்?

### வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க ஜி. ஜி. முயற்சி

— நமது நிருபர் எஸ். துரைராஜா —

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் ஜெர்மனியின் உதவியுடன் தொழிற் கல்வியும் பயிற்சியுமளிக்கும் கல்லூரியொன்று நிறுவப்படவிருக்கிறது.

வடபகுதியில் தமிழ் வாலிபர்களின் வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சியாகவே இக்கல்லூரிஇங்கு நிறுவப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

**16 விதமான தொழிற் கல்வி**

இக்கல்லூரியில் 16 விதமான தொழிற்கல்வியும் தொழிற்பயிற்சியுமளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(6-ம் பக்கம் பார்க்க)

## கடிதம் கொண்டுசென்றவர் தாக்கப்பட்டாராம்

### ஐ. ஜி. பிக்கு பண்டிதர் புகார்

கிளிநொச்சி, ஞாயிறு

தனது கடிதத்தை எடுத்துச்சென்ற ஒருவர் பொலிஸாரினால் தாக்கப்பட்டு, தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டது பற்றி கிளிநொச்சி எம். பி. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குப் புகார்செய்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த வி. செல்லையா என்பவர் தம்மிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே கிளிநொச்சி எம். பி. இந்தப் புகார் கடிதத்தை அனுப்பியுள்ளார். கடிதத்தின் பிரதியொன்று பிரதமருக்கும் அனுப்பியுள்ளார்.

எம். பி.யின் கடிதத்தை மன்னார் எம். பி. வி. ஏ. அழகக்கோனுக்கு அந்தநபர் எடுத்துச் சென்றதாகவும், அப்போது பொலிஸார் அவரைத் தாக்கியதாகவும், பொலிஸ் நிலையத்தில் 22 மணிநேரம் அடைத்துவைக்கப்பட்டதாகவும் கிளிநொச்சி எம். பி.யிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 'நெஸ்பிறே', விட்டாஸ்பிறே' கடைகளிலிருந்து வெளிவந்தன

— நமது விசேஷ நிருபர் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணநகரிலுள்ள பல வர்த்தகஸ்தாபனங்களில் பொலிசார் நேற்று நடத்திய திடீர் பரிசோதனையில் பால் உணவு டின்கள் பல வெளிவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நகரிலுள்ளசுமார் 22 கடைகளில் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டி பரிசோதனை நடத்தியபோது நெஸ்பிறே,விட்டஸ்பிறே,பிலாகன்போன்ற பால் மா டின்கள் பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகத்தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக பொலிசார் 3 வர்த்தகர்கள்மீது வழக்குத் தொடரவிருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண நகர மக்களின் தேவைக்குப் போதிய பால்மா உணவைஇந்தவர்த்தகர்கள் பதுக்கிவைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் வேண்டுமென்றே இவர்கள் இப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டுநிலையை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்களெனவும் பொலிஸ்

(2-ம் பக்கம் பார்க்க)

1. யானை மார்க் நம்பர் 1 சீமென்ஸ

ஓடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும். மறவாதீர்—சீமென்ஸ்.

2. சீமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணெயும், ஆமணக்கெண்ணெ கூந்தல் வளம் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சீமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**சீமென்ஸ் பற்பொடி:** தினமும் சீமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.

ஒரு பாக்கெட் 60 சதம், தபால் செலவு 60 சதம்

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று

இதுதான் நிவாரணம்:

**சீமென்ஸ் கடுக்காய் குளிகைகள்**

இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ 1/20, தபால் செலவு 60 சதம்.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**ஓடி கலோன்**

| | | | |
|---|---|---|---|
| 1 அவுன்ஸ் | 1-25 | தபாற்செலவு | 1-10 |
| 2 ,, | 2-25 | ,, | 1-10 |
| 4 ,, | 4-25 | ,, | 1-70 |

**விளக்கெண்ணெய்**

| | | | |
|---|---|---|---|
| 4 அவுன்ஸ் | 2-00 | தபாற்செலவு | 1-15 |
| 8 ,, | 3-50 | ,, | 1-70 |
| 12 ,, | 4-75 | ,, | 1-90 |
| 24 ,, | 9-00 | ,, | 2-25 |

**கிங் கோகனட் ஓயில்**

| | | | |
|---|---|---|---|
| 4 அவுன்ஸ் | 1-10 | தபாற்செலவு | 1-15 |
| 8 ,, | 2-00 | ,, | 1-70 |
| 12 ,, | 2-90 | ,, | 1-90 |
| 24 ,, | 5-50 | ,, | 2-25 |

**புத்தராஜ தைலம்**

| | | | |
|---|---|---|---|
| 2 அவுன்ஸ் | 1-35 | தபாற்செலவு | 85 சதம் |
| 6 ,, | 3-25 | ,, | 85 ,, |
| 12 ,, | 6-25 | ,, | 1-15 |
| 24 ,, | 12-00 | ,, | 1-70 |

**சீமென் பிரதர்ஸ்,**
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தமக்குள் கடவுளைக் கண்டவர்களுக்கு சில அடையாளங்களுண்டு. சாதி, சமயம், மொழி, தேசம் முதலிய வெளி வேற்றுமைகளைக் கவனிக்காமல் எல்லாருள்ளும் கடவுள் இருப்பதை உணர்ந்து யாவர் பாலும் அன்பும் கருணையும், சமரசமும் காட்டுவர், இன்சொல்லே பேசுவர்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருட புரட்டாதி 29உ 15-10-67

## மார்ட்டின் அறிக்கை

யாழ்ப்பாண மாநகர சபை வட்டார எல்லை நிர்ணய விஷயமாக மார்ட்டின் கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் செனேட் சபையில் சமர்ப்பித்து பகிரங்கப்படுத்தியது வரவேற்கத்தக்கது.

கமிஷனர் மார்ட்டின் அதை சமர்ப்பித்து சுமார் இரண்டு வருடங்களாகியும் அதை வெளியிடாமலிருந்ததால் அதுபற்றி ஆதாரமற்ற வதந்திகளும் தப்பபிப் பிராயங்களும் ஏற்பட்டு பொது மக்கள் மனதைக் குழப்புவதாயும், அறிக்கையை சிக்கிரத்தில் வெளியிட வேண்டுமென்றும் நாம் சமீபத்தில் கேட்டிருந்தோம். இப்போது அமைச்சர் இதை வெளியிட்டு விட்டதால் பொது மக்கள் அதைப் படித்து அது பற்றி தங்கள் கருத்தை தெரிவிக்க இனி வாய்ப்புண்டு.

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமும், தமிழரின் தலைநகரமென்றும் கூறப்படும் யாழ்ப்பாண மாநகரசபையில் இதுவரை 17 ஸ்தானங்களே இருந்து வருகின்றன. இனி இந் நகரை விஸ்தரித்து 25 வார்ட்டுகளாகப் பிரித்து இருபத்தைந்து பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்று கூறியுள்ள யோசனைதான் மார்ட்டின் கமிஷன் அறிக்கையின் முக்கிய யோசனை.

இங்கு ஜனத்தொகை அதிகரித்து, நகர மக்களும் பரவி வாழ்வதால், நகர எல்லையை விஸ்தரிக்கவும், அதிக பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும் வேண்டியது அவசியமாகின்றது இத் தலையங்கத்தை எழுதுகையில் கமிஷனின் அறிக்கை விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இதற்கான வேறு காரணங்களையும் கமிஷனர் தமது அறிக்கையில் கூறியிருப்பார். எப்படியும் இந்த யோசனை வரவேற்கத்தக்கதாகையால், இதற்கு அதிக எதிர்ப்பு இராதென்றே நம்பலாம்.

ஆனால் இந்த 25 வார்டுகளிலும் வாக்காளர் எண்ணிக்கை சரிசமமாகவின்றி ஏற்றத்தாழ்வுகள் அதிகமுள்ளன. சில வார்டுகளில் சுமார் 1400 வாக்காளரும், சிலவற்றில் 2400-க்கு மேலும் கூட இருக்கின்றனர். பிரிட்டனிலே வாக்காளர் ஏற்றத் தாழ்வுகள் 20 சத விகிதம் இருக்கலாமென்று இருப்பதாயும், யாழ்ப்பாணத்தில் சில விசேஷ காரணங்களால் 25 சத விகித வேற்றுமையுடன் புதிய வார்டுகளாய் பிரிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுவரை சிறுபான்மைத் தமிழருக்கு ஒரே ஒரு ஸ்தானம் இருந்திருக்கையில் இனி மூன்று இடங்கள் கிடைக்கக் கூடுமாம். அச்சமூகத்தவருக்கு அதிக பிரதிநிதித்வம் கிடைப்பதாயின் அது நல்லதே. ஆனால் இது அவர்களுக்கு நிச்சயமாகக் கிடைப்பதாக இருக்க வேண்டும்.

பெண்களும் போட்டியிட்டு யாழ்ப்பாண மாநகர சபையில் அங்கம் வகிக்க வேண்டியது மிக அவசியம் சபையில் அவர்கள் இல்லாதது பெரிய குறை. பெண்களுக்கும் சிறுபான்மைத் தமிழருக்கும் சில ஸ்தானங்களை சில வருடங்களுக்காவது சட்ட பூர்வமாக ஏன் ஒதுக்கக் கூடாது? பெண் வாக்காளரின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையில் சரிபாதி இருந்தும் அவர்களில் ஒருவராவது சபையில் அங்கம் வகிக்காதது பற்றி இந் நகரம் பெருமை கொள்ள முடியாது. இக்குறையைத் தீர்க்க கமிஷன் ஏதும் யோசனை கூறியிருப்பதாகத் தெரியவில்லை.

கலைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மாநகரசபைக்கு, 25 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக் கூடிய முறையிலேயே பொதுத் தேர்தல் நடத்தி, சபையை விஸ்தரிக்க வேண்டும். மார்ட்டின் கமிஷன் அறிக்கையை முதலில் எதிர்த்தவர்களில் சிலர், இப்போது மனம் மாறியுள்ளதாகத் தெரிகிறது. அரசியல் போட்டிக் கட்சிகள் இருக்கையில், இவ்வித விஷயங்களில் கருத்து வேற்றுமை இருப்பது இயற்கை. என்றாலும் யாழ்ப்பாண பொது மக்களின் நன்மையையும், இந்த நகரின் மதிப்பையும் கருதுபவர்கள் குறுகிய சுயநல எண்ணங்களை விட்டு, புதிய தேர்தல் மூலம் குறைகள் நீங்கி, யாழ்ப்பாண நகருக்குக் கூடிய நன்மைகள் கிடைக்க விட்டுக் கொடுத்து, ஒத்துழைப்பரென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

# 'இந்து மதத்தினர் புறக்கணிக்கப்படுகின்றனர்'

## உள்ளூராட்சி அமைச்சருக்கு எழுதுவினைஞர் சங்கம் முறைப்பாடு

கொழும்பு, சனி

அரசாங்க சேவையிலுள்ள இதர சமயத்தவர்களுக்கு சமய வழிபாட்டிற்கு இரு மணித்தியால ஓய்வு கொடுக்கப்படும் அதே நேரத்தில் இந்து ஊழியர்களுக்கு மட்டும் இவ்வித ஓய்வு வழங்க மறுப்பது இந்துசமயத்தையே இந்நாட்டில் புறக்கணிப்பது. போன்றதாகும் என அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உள்ளூராட்சி அமைச்சருக்குத் தெரிவித்துள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சமய வழிபாட்டிற்கு முறையே வெள்ளிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் இரு மணித்தியால ஓய்வு கொடுத்திருப்பதைப் போன்று இந்து ஊழியர்களுக்கும் வழங்கவேண்டுமென அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் அரசாங்கத்தைக் கோரியிருப்பதுடன் உள்ளூராட்சி மந்திரியையும் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருந்ததற்கு நடைமுறையிலிருக்கும் வழக்கத்தை மாற்றுவதற்குரிய காரணம் எதுவும் இல்லையென உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்திருப்பதைத் தொடர்ந்தே எழுதுவினைஞர் சங்கம் மேற் கண்டவாறு அறிவித்துள்ளது.

போயாதின விடுமுறையைத் தொடர்ந்து இவ்வித நடைமுறை ஏற்படுத்தப் பட்டதென்றும் புதிய நடைமுறையினால் இந்துக்களுக்கு எவ்வித பயனுமில்லையென்றும், இவ்வித நடைமுறையை தேசிய அரசாங்கமே ஏற்படுத்தியதனால் இந்துக்களுக்கும் அனுகூலம் ஏற்படும் வகையில் நிலைமையைச் சீராக்கும் பொறுப்பும் அவ்வரசாங்கத்தையே சாரும் எனவும் மேற்படி சங்கம் உள்ளூராட்சி அமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.

### இன்றைய பலன்

15-10-67
ஞாயிற்றுக்கிழமை

(புரட்டாதி மாதம் 29உ)

நட்சத்திரம் - சதயம் பகல் 7-49 மேல் பூரட்டாதி.
திதி-துவாதசி பகல் 10-48 மேல் திரயோதசி.
சுபநேரம்-9-02-10-32.
ராகுகாலம்-4-32-6-02-

மேஷம்-தடைதாக்கும், தனநஷ்டம்.
ரிபஷிம்-பெற்றோர் நலன், பெருமையுமுண்டு.
மிதுனம்-மக்கள் முன்னேற்றம், மனத்திடம்.
கடகம்- நினைவுச்சுழல், நிம்மதிக்குறைவு.
சிம்மம்-உரையாடல் இன்பம், ஊடலுமுண்டு.
கன்னி - வியாபாரக் குறைவு. மூலதனம்கரைதல்.
துலாம் புதியதிருப்பம், புத்துணர்ச்சி.
விருச்சிகம் - ஆழ்ந்த சிந்தை, ஆசாரமிகுதி.
தனுசு - போனதுவரும், போசனச் சொகுசு.
மகரம்-காணிப் பிணக்கு, சஷ்டநிலை.
கும்பம் - வெற்றித் திருநாள், விருந்து முண்டு.
மீனம்-வணிக பலிதம், வார்த்தை நலன்.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

### நெஸ்பிறே...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வித உணவுப்பொருளை வைத்துக்கொண்டு விற்பனை செய்யமறுப்பது குற்றம் எனவும் இவ்விதம் சட்டத்தைமீறுபவர்கள்மீது வழக்குத்தொடரப்படுமென வும்தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவுப்பொருளை வைத்துக் கொண்டு விற்பனை செய்ய [illegible] சாட்டியே மேற்படி 3 வர்த்தகர்களும் [illegible] செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### வருமானவரி ஆணையாளர் உறுதி

கிளிநொச்சி, சனி

''தமிழில் நிரப்பி அனுப்பிய வருமானவரிப் படிவத்துக்குச் சிங்களம் கலந்த வரிமதிப்பீட்டு அறிவித்தலை ஏன் அனுப்பியிருக்கின்றீர்கள் இதுதானா தமிழ்மொழிச் சட்டப் பிரமாணங்களைப் நடைமுறைப்படுத்தும் துறை'' என்று கேட்டுத் தமக்கு அனுப்பப்பட்ட வருமான வரி அறிவித்தலை வருமானவரி ஆணையாளருக்குத் தமிழில் நிரப்பி அனுப்புமாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் எழுதியிருந்தார்.

இதற்குத் திரு. இரத்தினத்துக்கு ஆணையாளர் எழுதிய கடிதத்தில் தவறுதலாக நேர்ந்த பிழை இது எனவும் இனிமேல் இவ்வாறு நிகழாமலும், தமிழில் எழுதும் தமிழ்மக்களுக்குத் தமிழிலே அறிவித்தல் அனுப்ப ஒழுங்கு செய்வதாகவும் உறுதியளித்திருக்கின்றார்.

### சரஸ்வதி விழா

கொழும்பு, சனி

ரத்மலானையில் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தாரால் நடத்தப்படும் இந்து மாணவர் விடுதியில் நவராத்திரி விழாக் கொண்டாடப் பட்டது. திரு. எஸ். நடேசன் கியூ. ஸி. தலைமை வகித்தார். சங்கத்தின் சேவையைப் பற்றியும் இந்த விழாக்களின் அவசியம் பற்றியும் தலைவர் தமது உரையில் விளக்கினார். இளைப்பாறிய நீதிபதி திரு. கந்தசாமி, திரு. மு. செ. கந்தையா ஆகியோரும் பேசினர்.

### உடுவில் எம்.பி.யின் அவசரத் தந்தி

உடுவில், சனி

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பிறமாகாணங்களிலிருந்து அரிசிகொண்டு வரத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக நிலவிவரும் வதந்தியால் வடபகுதியில் அரிசி, நெல் முதலியவற்றின்விலை அதிகரித்துள்ளதாகவும் இதனைத்தடுக்குமுகமாக உடன் நடவடிக்கை எடுத்து நிலைமையை தெளிவுபடுத்தும் வகையில் அறிவித்தல்செய்ய வேண்டுமென உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பிரதமருக்கும் உணவு அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ள அவசரத்தந்தியில் கேட்டுள்ளார்.

மக்களின் நலனை முன்னிட்டு இவ்விதநடவடிக்கை எடுக்குமாறு இவர் வற்புறுத்தியுள்ளார்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

கொண்டுவந்த மாணிக்கங்களையும், முத்துக்களையும், பொன்னையும் கைக்கொண்டு ஆரவாரிக்கின்ற அலைகளையுடைய காவிரியாற்றங் கரையிலுள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள் எல்லாவற்றுக்கும் முன் உள்ளவனும் நீயே பின்னுள்ளவனும் நீயே, எப்பொருட்கும் முதல்வனும் நீயே ஓலம்]

## ஐயாறன் எழுதுவது

அன்று பேராதனை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் ஒரு 'சபாஷ்' போட்டேன், புதிய மாணவர்களை ரயிலடியில் வரவேற்று அவர்களுக்கு உதவிசெய்ததற்காக. ஆனால் அங்கு புதிய மாணவர்களை எப்படியெல்லாம் இம்சித்துவருகின்றனரென்பதைக் காட்டும் சில படங்களைப் பார்த்ததும் மனதுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

வெயிலில் புதிய மாணவர்களை உட்காரச்செய்து முதலில் உள்ளவரின் கழுத்தில் காலை நீட்டிக்கொண்டு கைகளால் பின்னேக்கி நடக்கச்செய்வதாக ஒரு படம். சில மாணவர்கள் வெயிலில் தங்கள் புத்தகங்களை தலையில் வைத்துக் கொண்டு இரு கைகளையும் மேலே உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் என்னென்ன கண்ணராவிகளோ! பீடை பிடித்த இந்த 'ராக்கிங்' எப்போது தான் ஒழியப்போகிறது!

எவ்வளவு எச்சரிக்கை செய்தும் கடும் தண்டனை விதித்தும் இந்த வெட்கக் கேடான பழக்கங்களை நமது வாலிபர்கள் ஏன் விடாமல் கைக்கொண்டுவருகிறார்கள். இதைப்பற்றி தனியாக ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து இனி இந்தத் துர்ப் பழக்கங்களை அடியோடு ஒழிக்க கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

பேராதனை பூங்காவில் பல்கலைக்கழக மாணவரில் 500 பேருக்கும், அங்கு உல்லாசப்பிரயாணம்வந்தவேறு கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் மோதல்கள் ஏற்பட்டு வெட்கக்கேடான காரியங்கள் நடந்ததாகவும் பொலிசார் வந்து சமாளிக்க வேண்டியதாயிற்றென்றும் அறிய மிக வேதனையாகவுள்ளது.

தங்கள் அருமைக் குழந்தைகளை, பெரும் செலவு செய்து அங்கு படிக்க அனுப்பிவைக்கும்பெற்றோர்களுக்கு இதையெல்லாம் கேட்க எப்படியிருக்கும்! அதிலும் வடமாகாணப் பெற்றோர்கள் இதைப்பற்றி அதிகம் கவலைப்படுவது இயற்கை.

சர்வகலாசாலையிலே வேறு பாடங்களைக் கற்குமுன், குடிக்கவும், புகைக்கவும் தான் மாணவர்களில் பலர் கற்றுக் கொள்வதாயும், இதை நிறுத்தினால் அங்கு நிலைமை சீரடையுமென்றும் ஒரன்பர்கூறுகின்றார். இதை நிறுத்த முதல் நடவடிக்கையாக பெற்றோர்களும் அங்குள்ள பேராசிரியர்களும் மாணவருக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். இருப்பார்களா?

ஃ ஃ ஃ

கார்கொள் கொன்றை சடைமேலொன்று, உடையாய் விடையார் கையினன், மூர்க்கர் புரமூன்றெரி செய்தாய் முன் நீ பின் நீ முதல்வன் நீ, வார்கொள் அருவி பலவாரி, மணியும் முத்தும் பொன்னுங்கொண்டு, ஆர்க்கும் திரைக்காவிரிக்கோட்டத்து ஐயாறுடைய அடிகேளோ!

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்


[கார்காலத்தைக்கொண்ட கொன்றைமலரின் மாலையொன்றைச் சடைமேல் உடையவனே, [விடையை ஏறுபவனே, அறிவில்லாதவரது ஊர்கள் மூன்றைச் சிரிப்பினால் எரித்தவனே, பல அருவிகள் வாரிக்

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உலக கம்யூனிசத்துக்கு எதிராக ரஷ்ய-அமெரிக்க உடன்படிக்கை

## சீனப் பிரதமர் கண்டனம்



பீகிங், ஒக். 14

பீகிங்குக்கு விஜயம் செய்திருந்த அலபேனிய தூதுகோஷ்டியொன்றுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவமொன்றில் பேசுகையில், ரஷ்யாவையும் அமெரிக்காவையும் சீனப் பிரதமர் திரு. சூ என் லாய் கடுமையாகத் தாக்கினுர்.

உலக கம்யூனிசத்துக்கெதிரான உடன்படிக்கை ஒன்றை, அமெரிக்காவும் ரஷ்யாவும் செய்து கொண்டிருப்பதாகத் திரு. சூ என் லாய் கூறினுர். ஆனுல், அச்சதிகார நாடுகளின் திட்டம் ஈற்றில் முறியடிக்கப்படுமென அவர் எச்சரித்தார்.

அல்பேனியாவுக்கும் சீனுவுக்குமிடையேயான நெருங்கிய தொடர்புகள் பற்றியும், அவை மென்மேலும் வளர வேண்டிய அவசியம் குறித்தும் பிரதமர் சூ என் லாய் பேசினுர்.

## தாஷ்கெண்ட் உடன்படிக்கை இனிக்கிறது?

ஜெய்பூர் ஒக். 14

தாஷ்கெண்ட் உடன்படிக்கையின் அடிப்படையில், ராஜஸ்தானில் சீனிப் பிரச்னையைத் தீர்க்க, பாகிஸ்தான் கள்ளக் கடத்தல் காரர்கள் இந்தியர்களுக்கு உதவியளித்து வருகிருர்கள்.

தட்டுப்பாடு காரணமாக, ராஜஸ்தானில் சீனி இப்போது ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விற்கட்படுகிறது.

பாகிஸ்தான் கள்ளக் கடத்தல் காரர், கிலோ 2 ரூபாயாக வாங்கி, ராஜஸ்தான் எல்லைப்புற மாவட்டங்களில் கிலோ 4 ரூபாயாக விற்பனை செய்கின்றனர்.

# முன்னுள் இந்திய இராணுவ தளபதி ஜெனரல் காரியப்பா

## அயூப்கானைச் சந்தித்தார்

ராவல்பிண்டி, ஒக். 14

முன்னுள் இந்தியஇராணுவத்தளபதி ஜெனரல் காரியப்பா, நேற்றுஇங்கு, பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கானைச் சந்தித்துப் பேசினுர்.

இப்பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானில் முன்னுள் இந்திய தூதுவராகவிருந்த திரு. ஸி. ஸி. தேசாயும் கலந்துகொண்டார்.

ஜெனரல் காரியப்பா, திரு. தேசாய் ஆகியோரி மேற்கொண்டுள்ள இவ் விஜயம் உத்தியோகபூர்வமற்றதாகும்.

தாஷ்கெண்ட் உடன்படிக்கையின் அடிப்படையில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவை வளர்க்கக்கூடிய வாய்ப்புக்களை இந்த உத்தியோகபூர்மற்ற தூதுகோஷ்டி ஆராயுமெனத்தெரிகிறது.

# உ. பி. அரசாங்கத்தில் பிளவு ஏற்படுகிறது

ஹொங்கொங், ஒக். 14

ஹொங்கொங்கில் நேற்று ஏற்பட்ட இடதுசாரிக்கலவரங்களின்போது, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 3 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர்.

கடந்த மாதம் ஹொங்கொங்கில் இடதுசாரிகள் ஆரம்பித்த கலவரங்களில், நேற்றைய கலவரங்களே மிக மோசமானவை என வர்ணிக்கப்பட்டுள்ளன.

# சீன வர்த்தக தூதுகோஷ்டி பாகிஸ்தான் வருகிறது

கராச்சி, ஒக். 14

சீனுவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான வர்த்தகத்தை விஸ்தரிக்கவும், பாகிஸ்தானுக்கு அதிக சீனப் பொருளாதார உதவி அளிக்கவுமென்ற நோக்கத்துடன், ஓர் உயர்தர சீன வர்த்தக தூதுகோஷ்டி நாளை பாகிஸ்தான் வந்து சேருமெனத் தெரிகிறது.

பாகிஸ்தானுடனுன வர்த்தகத்தைப் பெரிய அளவில் விஸ்தரிக்கும் வர்த்தக உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடுவது பற்றி, இச்சீன வர்த்தகத் தூதுகோஷ்டி ஆராயும்.

# ஹொங்கொங் கலவரத்தில் மூன்று பேர் பலி

பம்பாய், ஒக். 14

வட கிழக்கு பம்பாயில் வன்முறைக் கும்பலொன்றைக் கலைக்கப் பொலிசார் சுட்டதில் மூவர் காயமுற்றனர். 16 பேர் கைது செய்யப்பட்டனர்

பொலிஸ் கோஷ்டியை, வன்முறைக் கும்பலொன்று சுற்றி வளைத்துக் கடுமையான கல்வீச்சில் இறங்கியுள்ளது. அப்போது தான் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கல் வீச்சினுல் 6 பொலிஸ்காரர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

# டெலிவிஷன் வருத்திக்கு ரஷ்ய உதவி

கராச்சி, ஒக். 14

பாகிஸ்தானின் டெலிவிஷன் முறையை அபிவிருத்தி செய்வதற்கு ரஷ்யா உதவியளிக்கும்.

இது சம்பந்தமாக, சோவியத் டெலிவிஷன் நிபுணர்கள் கோஷ்டியொன்று, விரைவில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமெனத் தெரிகிறது,

டெலிவிஷன் முறையைக் கல்வித் திட்டத்துக்குப் பயன்படுத்துவது பற்றியும் இந் நிபுணர்கள் கோஷ்டி, பாகிஸ்தானுக்கு ஆலோசனை அளிக்கும்.

## பல்கேரியாவில் இந்தியப் பிரதமர்

சோபியா, ஒக். 14

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி, நேற்று பெல்கிரேடிலிருந்து பல்கேரியத் தலைநகரான சோபியா வந்து சேர்ந்தார். அவரை பல்கேரியப்பிரதமர் திரு. ஜிக்கொவ்வரவேற்ருர் பல்கேரிய மக்கள், திருமதி இந்திரா காந்திக்குத் தமது வழக்கமான ரோஜா மலர் வரவேற்பை அளி தார்கள்.

பிரதமர் இந்திராவை வரவேற்றுப் பேசுகையில், மறைந்த பிரதமர் திரு. நேருவின் இலட்சியங்களைக் கடைப்பிடித்து வரும் திருமதி, இந்திரா பாராட்டுக்குரியவர் என்று திரு. ஜிக்கொவ் குறிப்பிட்டார்.

பிரதமர் இந்திரா பதிலளிக்கையில் திரு. நேருவுக்கு பல்கேரியாவுக்கு விஜயம் செய்ய ஆவலாக இருந்ததாகவும், ஆனுல்அந்தஆவலைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றும் கூறினுர்,

பல்கேரியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நிலவும் நெருங்கிய தொடர்புகள் பற்றி இரு பிரதமர்களும் தமது பேச்சில் குறிப்பிட்டனர்.

---

இந்தோனேஷிய

## பார்லிமெண்ட் குழு இந்தியாவுக்கு விஜயம்

புதுடில்லி, ஒக். 14

இந்தோனேஷியப் பார்லிமெண்ட் அங்கத்தவர்களின் தூதுகோஷ்டியொன்று, ஒரு நல்லெண்ண விஜயத்தில் இந்தியாவுக்கு விரைவில் வரவிருக்கிறது. இத்தூதுகோஷ்டிக்கு இந்தோனேஷிய பார்லிமெண்ட் சபாநாயகர் தலைமைதாங்குவார்.

## பிராந்திய மொழிகள்

புதுடில்லி, ஒக். 14

பிராந்திய மொழிகள், பல்கலைக்கழகக் கட்டத்தில் பயன்படுத்தப்படுவதால் உலகின் மற்றைய பாகங்களிலிருந்து இந்தியா தனித்துவிடும் அல்லது இந்திய ஒற்றுமை குலைந்துவிடும் என்ற வாதத்தைத் தாம் ஏற்கவில்லை என்று இந்திய கல்வி மந்திரி திரு. திருகுணுசென் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் இந்தியக்கிளையின் கூட்டத்தில் பங்குபற்றிப்பேசிய கல்வி மந்திரி, பிராந்திய மொழிகளுக்கு இடமளிப்பது, தேசிய கொள்கைக்குப் பொருத்தமானதென்று குறிப்பிட்டார்.

## இந்திய துறைமுக அபிவிருத்தி

புதுடில்லி, ஒக். 14

இந்தியத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது பற்றி ஆராய, பிரிட்டிஷ், அமெரிக்க, டச்சு நிபுணர்களின் கோஷ்டியொன்று விரைவில் புதுடில்லி வந்துசேரவிருக்கிறது.

இப்போது இந்தியாவில் எட்டுத்துறைமுகங்கள்இருப்பதாகவும், இன்னும் நான்கு அல்லது ஐந்து துறைமுகங்களை அபிவிருத்திசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், லண்டனில் தற்போது விஜயம் செய்யும் இந்திய கப்பல். போக்குவரத்து மந்திரி டாக்டர் கே. வி. ராவ் கூறியுள்ளார்.

## நிதி மாநாடு

நியூயோர்க், ஒக். 14

ஐக்கிய நாடுகள் மூலதன அபிவிருத்தி நிதியின் முதலாவது உறுதியளிப்பு மாநாடு, ஐ. நா, தலைமைக் காரியாலயத்தில் இம்மாதம் 31-ந் திகதி நடைபெறவிருக்கிறது, இதற்கான அழைப்பை ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட் 131 நாடுகளுக்கு அனுப்பியுள்ளார்.

மூலதன அபிவிருத்திநிதியின்நோக்கம், அபிவிருத்தியடைந்துவரும்நாடுகளுக்கான தற்போதைய நிதி உதவியை, நன்கொடை, நீண்டகாலக் கடனுதவிகள் மூலம் மேலும் விஸ்தரிப்பதேயாகும்.

# வடகிழக்கு பம்பாயில் பொலிசார் சுட்டு மூவர்காயம்

லக்னே, ஒக். 14

உத்தரப்பிரதேச ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகுவதாக, அதன் அங்கத்துவ கட்சிகளான கம்யூனிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சிகள் பயமுறுத்தியுள்ளன.

நில வரிச்சட்டம் பற்றிய அபிப்பிராய பேதமே, இதற்குக் காரணமெனத் தெரிகிறது. சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென கம்யூனிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இதுபற்றி, உத்தரப் பிரதேச முதல் மந்திரி திரு. குர்ணும் சிங்கிடம் கேட்டபோது, அவர் எதுவும் குறிப்பிடவிரும்பவில்லை.

# ஆஸ்பத்திரி தீ விபத்தில் தப்பிய கர்ப்பிணி

## பெண்மகவைப் பெற்ருர்

உஜ்ஜைன், ஒக். 14

இங்கு ஆஸ்பத்திரி ஒன்றில் நடைபெற்ற விபத்தில் டாக்டர் ஒருவரும், நர்ஸ் ஒருவரும் காயமுற்றனர்.

ஆஸ்பத்திரியில் ஒரு சாதனம் வெடித்ததன் விளைவாகத் தீப்பற்றிக்கொண்டது. இத் தீ, பக்கத்திலுள்ள சத்திர சிகிச்சை அறைக்கும் பரவிவிட்டது. அப்பொழுது அவ்வறையில் ஒரு பெண்ணுக்குப் பிரவச சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அறைக்குள் தீ பரவியதும் டாக்டர்கள் அறை ஜன்னல்களை உடைத்தனர். பெண் நோயாளி உடனடியாக வேருெரு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

## ஒரிஸ்ஸாவில் புயல் நிவாரணம்

பட்னு, ஒக். 14

ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் புயலினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்குமுகமாக ஒரிஸ்ஸா அரசாங்கம் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

ராஜ்யத்தில் ஏற்பட்ட உடைமைச் சேதம் 5 கோடி ரூபாய் மதிப்பிடக்கூடியதென ராஜ்ய முதல் மந்திரி தெரிவித்துள்ளார்.

புயலினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்குமாறு மத்திய அரசாங்கத்தையும் மற்றும் ராஜ்யங்களையும் ஒரிஸ்ஸா முதல் மந்திரி கேட்டுள்ளார்.

## ஆலை விபத்தில் மூவர் மரணம்

கல்கத்தா, ஒக். 14

ஹவுக்லி மாவட்டத்தில் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட ஓர் ஆலையில் இயந்திரமொன்று வெடித்ததன் விளைவாக மூன்று பேர் உயிரிழந்தனர். மற்றும் சிலர் காயமடைந்தனர்.

இருவர் விபத்து நடந்த இடத்திலேயே மரணமானுர்கள் எனவும், மற்றவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு இறந்ததாகவும் கூறப்படுகிறது.

# பாம்புக்கடி மரணம் பீதியினுல் ஏற்படுகிறது

## 'பாம்பு ராஜா' விளக்கம்

பங்களூர், ஒக். 14

'பாம்பு ராஜா'வாகிய திரு. சன்னபஸப்பா ஹொஞ்சப்பா ஹவுயூரின் கருத்துப்படி, பாம்புக் கடியிலும் பார்க்கப் பாம்புக் கடிப் பீதியினுலேயே அதிகமானேர் மரணமடைகிருர்கள்.

இங்குள்ள செக்கிரட்டேரியட் சங்கக் கட்டிடத்தில், பாப்புக் கண்காட்சி யொன்றை நடத்திக்காட்டிய திரு. ஹவுயூர், 80 வகைப் பாம்புகளைத் தாம் சந்தித்துள்ளதாகக் கூறினுர். இவற்றில் 20 மட்டுமே நச்சுத்தன்மை வாய்ந்தவை. அவற்றிலும், மூன்று வகைப் பாம்புகளே உடனடி மரணத்தை விளைக்கக் கூடியவை.

தமது சக மாணவன் ஒருவன், பாம்புக் கடியினுல் இறந்ததைத் தொடர்ந்தே, 'பாம்பு ராஜா'வான திரு. ஹவுயூர், பாம்புக்கடி மருத்துவத்தில் ஈடுபட்டார். பாம்புகள் பற்றி அறிவதற்கென, பல வருடங்களாக அவர் இந்தியா முழுவதும் பிரயாணம் செய்து, பல மக்களையும் சந்தித்து வந்துள்ளா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் நிவாரண சங்கத்தின் வேண்டுகோள்

சுழிபுரம், சனி

யாழ். மாவட்ட புற்று நோய் நிவாரணசங்கத்தினர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் ஒரு சுற்று நிருபம் அனுப்பியுள்ளனர். வடபகுதியிலுள்ள புற்று நோயாளர்களுக்கு தங்களாலான பண உதவியை தாராளமாக உதவும்படி இதில் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

## சங்கம் மகஜர்

கோப்பாய், சனி

யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய்வரை சேவையிலீடுபட்டிருந்த 3 இரட்டைத் தட்டு பஸ்களில் ஒன்றை சேவையிலிருந்து நிற்பாட்டியது குறித்து உடன்நடவடிக்கையெடுத்து மீண்டும் அந்த பஸ்ஸினை சேவையில் விட ஆவன செய்யும்படி கோப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளது.

## பரிசளிப்புவிழா

நாவற்குழி, சனி

ஒரு பாடசாலை முன்னேற்றத்திற்கு அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும் ஒத்துழைக்கவேண்டும். அப்படி ஒத்துழைத்தால் தான் அப்பாடசாலை மாணவர்களின் தரம் உயரும்'' என நாவற்குழி மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் அதிபர் திரு. ஆ. கந்தையா குறிப்பிட்டார். விழாவுக்கு சுகாதார அதிகாரி டாக்டர் ச. மகாதேவாவும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். விழாவில் இன்னிசைக் கச்சேரிகள், பிரசங்கம், பேச்சுப்போட்டிகள் ஆகியன இடம்பெற்றன.

பேச்சுப் போட்டிகளில் பரிசில் பெற்றவர்கள் வருமாறு:

மேற்பிரிவு: செல்வன் ந. சிவஞானம், செல்வி செ. நவமணி. மத்தியபிரிவு: செல்வன் நா. ஜெயசோதி, செல்வி இ. வசந்தாதேவி.

திருமதி மகாதேவா பரிசில்கள் வழங்கினர்.

## பொன் விழா

சுன்னாகம், சனி

காரைநகர் சைவமகா சபை தனது பொன்விழாவை விரைவில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

### முல்லைத்தீவு

# கடையில் மூன்று மூடை அரிசி கைப்பற்றப்பட்டது

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவிலுள்ள கடையொன்றில் மூன்றுமூடை 'மில்சாட்' அரிசி கைப்பற்றப்பட்டது. திடீர் பரிசோதனை செய்த உணவு விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களான திரு. ரி. சிவப்பிரகாசம், திரு. வி. முதலித்தம்பி ஆகியோர் நடத்திய பரிசோதனையின் போது இவை கைப்பற்றப்பட்டன.

உடன் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி மேற்படி மூன்று மூடை அரிசியையும் பறிமுதல் செய்துள்ளதாகவும், அதற்கு அரசாங்கம் ஒருவிதமான பணமும்கொடுக்கமாட்டாதெனவும் அறிவித்துள்ளார்.

## மக்கள் ஏமாற்றம்

பல்லவராயன்கட்டு, சனி

பல்லவராயன்கட்டு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் சென்ற 12-ம் திகதி விவசாயக்கடன் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அநேகமான மக்கள் அதிகாலையிலிருந்தே காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நேரிட்டதாகத் தெரியவருகிறது. கடன் வழங்குவதற்குப் பொறுப்பானவர் அன்று அங்கு வராமலிருந்ததாலேயே இவ்விதம் மக்கள் ஏமாற்றப்பட்டதாகத் தெரிகிறது.

## நவீன களைநாசினி அறிமுகம்

முல்லைத்தீவு, சனி

வவனியா மாவட்ட அதிபர் திரு. பீ. சீ. பெரேரா முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து காரியாதிகாரி அலுவலகத்தில் கரைதுறைப்பற்றில் உள்ள பலநோக்கக் கூட்டுறவுச்சங்கங்களின் உறுப்பினர்கள், விவசாயிகள் ஆகியோர் மத்தியில் நவீன முறைப்படி தயார் செய்துள்ள களை நாசினியை அறிமுகப்படுத்தினார். கூடிய நெல் விளைவைப்பெருக்க நவீன முறையில் களைகட்டல் அவசியம் என்றும், தற்போது ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒவ்வொரு களைநாசினியைக் கொடுப்பதாகவும் கூறினார். இவருடன் மேலதிக மாவட்ட அதிபர் திரு. ஏ. பெருமையினரும் வந்திருந்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 15-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 கத்தோலிக்கஆராதனை, 7-15 பவனம், 7-30 வாத்திய இசை. 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி. 9-30 இசைக்கச்சேரி.





Mister

மிஸ்டர் ஷவரஞ் செய்வதில் பரம ஆனந்தம். அடுத்து முகஷவரஞ் செய்யும்போது இதை பரீட்சித்துப் பாருங்கள் — இதன் சிறப்பம்சம் தான் என்னே! பல தடவைகள் ஷவரஞ் செய்யும்போதும் சொகுசான, திருப்தியான, வியப்பான செயல்ச் சிறப்பைத் தரும்.

ஏக விநியோகஸ்தர்கள் :

ஈ.பி.கிறீஸி அன்ட் கம்பெனி லிமிட்டெட்

NB27-67-MASTERS


# நவராத்திரி விழா போட்டி முடிவுகள்

மன்னார், சனி

மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் நவராத்திரி இறுதி 3 நாட்களையும் கொண்டாடியது. சங்கம் நடத்திய திருமுறை இன்னிசை, பேச்சுப்போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. நா. வேதாரணியசேயோன் பரிசில்கள் வழங்கினார். பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

பாலர்பிரிவு: பெண்கள்- க. சசிகலா, ம. திருமலர்ச்செல்வி, ம. தேவகி.

கீழ்ப்பிரிவு: பெண்கள்- பா. மிதிலாகானசரஸ்வதி, ப. மேகலா, வே. இராதா.

மேற்பிரிவு: பெண்கள்- ந. இராஜசிறீதேவி, ம. ஜெகதீஸ்வரி, ஐ. ஸ்ரீதேவி.

பாலர்பிரிவு: ஆண்கள்- க. மோகனகுமார், ப. அசோகன், கு. மணிவண்ணன்.

கீழ்ப்பிரிவு: ஆண்கள்- ச. நடேசலிங்கம், க. சுகுமார், ந. சாந்திகுமார்.

மேற்பிரிவு: ஆண்கள்- க. பாலகெங்காதரன்.

### திருமுறை இன்னிசைப்போட்டி

பாலர்பிரிவு: பெண்கள்- ந. சித்திரா, க. சியாமளாதேவி, ப. சரோஜினிதேவி.

கீழ்ப்பிரிவு: பெண்கள்- பா. மிதிலாகானசரஸ்வதி, ச. சுரேந்திரா, ப. மேகலா.

மேற்பிரிவு: பெண்கள்- ச. நாகேஸ்வரி, இ. அமராவதி, ஆ. இ. யோகாம்பிகை, த. யசோதையம்பாள், ம. ஜெகதீஸ்வரி.

### கதாப்பிரசங்கம்

க. பாலகெங்காதரன், ந. சரச்சதிரன், க. மகேந்திரன்.

பாலர்பிரிவு: ஆண்கள்- ச. சற்குணராஜன், ப. அசோகன், ச. சண்முகலிங்கம்.

கீழ்ப்பிரிவு: ஆண்கள்- ச. நடேசலிங்கம், ம. குணரத்தினம், ந. சாந்திகுமார்.

மேற்பிரிவு: ஆண்கள்- க. பாலகெங்காதரன்.

### திசைமாறிச் சென்ற

# கரையூர் மீனவர் விரைவில் திரும்புவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கரையூரில் இருந்து 'நவலங்கர்' என்னும் படகில் இந்தியாவுக்குத் திசை மாறிச் சென்ற ஐந்து மீனவர்களும் கூடிய சீக்கிரம் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷர் கடித மூலம் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆகஸ்ட் மாதம் 27-ந் திகதி திசை மாறிச் சென்ற கரையூர் படகு தஞ்சாவூரில் அதராம்பட்டணக்கரையை அடைந்ததாகவும் இந்த ஐந்து மீனவர்களும் இப்பொழுது சென்னையில் மண்டப முகாமில் பாதுகாப்பாக இருக்கிறார்களெனவும் கமிஷனர் திரு.

[5-ம் பக்கம் பார்க்க]

## ரசாயன தொழிற்சாலை கூட்டம்

கிளிநொச்சி, சனி

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டத்தையும் ஆனையிறவு உப்பளம் அபிவிருத்தித்திட்டத்தைப்பற்றியும் கலந்துரையாடி இத்திட்டங்களின் விருத்தியை விரைவுபடுத்துதற்கு வழிவகுக்க இத்தொழிற்சாலைகளின் உத்தியோகத்தர்களையும் தொழிற் சங்கப்பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டுமாறு கிளிநொச்சி எம். பி. இக்கூட்டுத்தாபனங்களின் தலைவர் திரு. மா. சிவநாதனைக் கேட்டிருந்தார். இதன்படி நாளை பரந்தன் கூட்டுத்தாபனத்திலும், ஆனையிறவு உப்பளத்திலும் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி.யும் கூட்டுத்தாபனத் தலைவரும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

## விவசாயிகள் ஊக்கம்

பண்டத்தரிப்பு, சனி

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காட்டி வரும் ஆர்வத்தினால் விவசாயிகள் பலரும் உருளைக்கிழங்குச் செய்கையில் ஊக்கம் காட்டவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்குச் செய்கை பற்றிய கருத்தரங்கு விவசாய விஸ்தரிப்புப் பகுதியினால் பல இடங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. உருளைக்கிழங்குச் செய்கைக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் கடனுதவி வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.


அனுபவமுள்ள வைத்தியரின் மேற்பார்வையில்

சித்த வைத்திய மருந்துகள்

ஆயுர்வேத மருந்துகள்

மருந்துச் சரக்குகள்

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிறதர்ஸ்

மருந்துக்கடை

[ புதியபஸ்நிலையத்துக்கு அருகாமை ]

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## குமாஸ்தா தேவை

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவிர்த்திச் சங்கத்திற்கு ஓர் குமாஸ்தா தேவை. மனுக்கள் 31-10-67 நண் பகல் 12 மணிக்கு முன்பதாக எனது கைக்குக் கிட்டப் பதிவுதபாலில்இடப் பக்கத் தபால் உறையில் மேற்பாகத்தில் குமாஸ்தா பதவிக்கான மனு என எழுதியனுப்புதல் வேண்டும்.

வயது: 25 க்கும் 45 க்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தகமை: சிரேஷ்ட தராதரப் பத்திரத்தையுடையவர்களாகவும் தமிழ், ஆங்கிலம் தட்டச்சுப் பொறியியலில் அனுபவமும் தராதரமும் உடையவர்களாகவும் கணக்கு வைத்தல் முக்கிய அம்சமாகக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பரீட்சார்த்தகாலம்: தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி ஒருவருட காலத்திற்குப் பரீட்சார்த்த நியமனமாக இருக்கும். இக்கால எல்லையுள் நடத்தை, வேலைத் திறன், அவரது நிரந்திர சேவையை அங்கீகரிக்கும் முக்கிய அம்சமாகும்.

சம்பளம்: பரீட்சார்த்த காலமான ஒரு வருடத்திற்கும் ரூபா 100-00 மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படும். பரீட்சார்த்த காலத்தின்பின் தகமையாதியவிற்கேற்ப சம்பள உயர்ச்சி நிர்ணயிக்கப்படும்.

பிணை: தேர்ந்தெடுக்கப்படும் மனுதாரர் காசுப் பிணையாக ரூபா 1000-00மும் ஆதனப் பிணையாக ரூபா 2,000-00 மும் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றே கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்றபின்பே உத்தியோகப் பொறுப்புப் பாரம் கொடுக்கப்படும். அத்துடன் கூட்டுறவுச்சங்க விதிக்கிசைய ஓர் ஒப்பந்தமும் செய்தல் வேண்டும். கூட்டுறவு பயிற்சிக் கலாசாலையின் தராதரப் பத்திரம் முக்கிய கவனத்திற்கு எடுக்கப்படும். இத்தெரிவையாதாரமாகக் கொண்டு ஆதரவு தேடுதல் சங்கத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருடைய கடிதம் அணைத்தல் ஆதியன தராதரமற்றவரென்பதைக் காட்டும். குறிப்பிட்ட மனுக்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். சகல மனுக்களும்:-

தலைவர், யாழ்ப்பாணம், சௌக்கியசேவை கூட்டுறவு கடன் நிவிர்த்தி சங்கம், தபால்பெட்டி: 58, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கே இடுக. 283

## தேவை

ஊர்காவற்றுறைப் பட்டின சபைக்கு இரு வரி அறவிடுபவர்கள் தேவை. விண்ணப்பகாரர்கள் கல்வியறிவுடையவர்களாயும் நன்னடத்தை உடையவர்களாயும், ரொக்கப் பிணையாக ரூபா 1500 - கட்டக் கூடியவர்களாயும் இருத்தல் வேண்டும். மேற்காட்டிய தகுதியுடையவர்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ள அலுவலகத்திற்கு 25-10-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பதாரர் இவ்வேலை சம்பந்தமான முழுவிபரங்களையும் காரியாலய அலுவல் நேரங்களில் நேரிலே அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை. 288

## முகாமையாளர் தேவை

ஜெயந்திநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முகாமையாளர் பதவிக்கு ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் 22-10-67-ம் திகதிக்கு முன்னதாக கீழ் வரும் தகமைகளுக்கமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் கௌரவ காரியதரிசி, ஜெயந்திநகர், ப. நோ. கூ. சங்கம், உருத்திரபுரம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**தகமைகள்**

தராதரம்:- கனிஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் கணிதம்/ஆங்கிலம் விசேஷ சித்தியடைந்தவரும் கூட்டுறவுப்பயிற்சி பெற்றவருமாக இருத்தல் வேண்டும்.

வயது:- 22 வயதுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

பிணை:-ரூபா 1000/-ரொக்கம்.

வேதனம்:- ரூபா 100/- எல்லாம் உட்பட.. சேல்ஸ்மன் அலவன்ஸ் ரூபா 50/- வழங்கப்படும். 289

## கொழும்பு சன்றைஸ் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு சன்றைஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களுக்குமிடையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் சன்றைஸ் கோஷ்டியினர் 4—1 கோல்களால் பழைய மாணவர்களைத் தோற்கடித்தனர்.

இப் போட்டிக்கு திரு ஈ. கனகலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். [வி. நி]

## என்றியரசர் வென்றது

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை புனிதஎன்றியரசர் கல்லூரிக்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி 1-ம் பிரிவுக்குமிடையே நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் என்றியரசர்கல்லூரியினர் 6கோல்களைப் போட்டு வெற்றி பெற்றனர். நடேஸ்வராக் கல்லூரியினர் ஒருகோலும் போடவில்லை.

## பாலர்விளையாட்டுப் போட்டி

புத்தளம், சனி

புத்தளம் ஸாகிரு பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி பாடசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. புத்தளம் சிலாப வட்டார வித்தியாதிகாரி ஜனாப் எம் சி. தாஹா தலைமைதாங்கினார். பாடசாலைக் கீதத்துடன் தலைவர் கொடியை உயரப் பறக்கவிட்டார், திரளான மக்கள் சிறுவர்களின் ஆட்ட ஓட்டங்களைப் பார்க்க குழுமியிருந்தனர். சிறுவர்களின் முயல், தவளை, நண்டு, குரங்கு ஓட்டங்கள் பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் சிறந்ததாக இருந்தன. கண் கட்டி ஓட்டமும் நடைபெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கு ஜனாப் தாஹா பரிசில்களை வழங்கினார்.

## சென். ஜோன்ஸ் என்றியரசர் மோதல்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை என்றியரசர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 2-ம் பிரிவினர்களுக்கான ஆட்டத்தில் இரு கல்லூரிகளும் தலா மூன்று கோல்கள் போட்டு சரிசமமாகப் போட்டியை முடித்துக்கொண்டன.

1-ம் பிரிவினர்களுக்கான போட்டியில் சென்ஜோன்ஸ் ஒரு கோலால் என்றியரசர் கல்லூரியைத் தோற்கடித்தது. ! இப் போட்டிகள் இளவாலை என்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

## வை. எம். சி. ஏ. வெற்றி

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. விளையாட்டுக்கழகத்துக்கும் என்றியரசர் கல்லூரி 2-ம் பிரிவுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் வை. எம். சி. ஏ. கழகத்தினர் 2 கோல்கள் போட்டு வெற்றியீட்டினர். கல்லூரியினர் ஒருகோலும் போடவில்லை. இப்போட்டிகள் என்றியரசர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

### மழையால் மகிழ்ச்சி

குமுழமுனை, வெள்ளி

குமுழமுனையில் நிலவி வந்த வரட்சிக்குப்பின் நேற்றுமுதல் மழைபெய்யத் தொடங்கியுள்ளது. வயலில்நெல்லை விதைத்துவிட்டு மழைக்காக வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்த விவசாயிகள் மழையைக் கண்டதும் மிக மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.




## பௌர்ணமி கலை விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வழமையான பௌர்ணமி நாள் கலை விழா எதிர்வரும்18-ம் திகதி புதன்கிழமை மாலை 6-45 மணியளவில் யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

[4-ம் பக்கத் தொடர்ச்சி]
ஜி. ஜி.க்கு அறிவித்துள்ளார்.

இதுவிஷயமாக திரு. ஜி. ஜி., இந்திய ஹைகமிஷனருடன் தொடர்புகொண்டிருந்தார். [வி. நி.]

**REGAL** JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Ann Margret & Louis Jourdan
in
**Made in Paris**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
சிவாஜி - கே ஆர். விஜயா
நடித்த
**தங்கை**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரஞ்சன்-அஞ்சலிதேவி
நடித்த
**நீலமலைத் திருடன்**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
பிரதீப்குமார்,
கே. என். சிங், ஹெலன்
முதலியோர் நடித்த
**பாஸ்போர்ட்**
[Passport] ஹிந்தி

## வரி விளம்பரம்

### தேவை

நெசவாளர்

கைத்தறி நெசவுவேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ச. சுந்தரமூர்த்தி, உப. தபாற்கத்தோர், கீரிமலை. 2245

மனேச்சர்:

கலாசோப் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு மனேஜரும் வான் விற்பனவுகாரரும் [Van Salesman] தேவை தேர்ந்தெடுக்கப் படுவோர் பிணைப்பணமாக 750/- ரூபா. கட்டவேண்டி ஏற்படும். ஆண்-பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. மனேஜர், கலாசோப் தொழிற்சாலை, சங்கானை. 2251

### விற்பனைக்கு

கார்

எண்ணாயிரம் தொடர்பு உடைய சி. என். A/40 கார் நல்லநிலமையில் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். யெப்னாமோட்டோர்ஸ், 91, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 2253

### WANTED

Representatives

Wanted Representatives either sex, full or part-time, to operate our activities in all districts. Training provided. Retired persons also considered. Attractive remuneration. Written applications only to: Mahaluckshumi Agencies, Finance and Sales Company, 15/22, power house Road, Jaffna. 2254

## 3-வது குதூகல வாரம்!

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] — **பிளாஸா** [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

**விஜயா** [மட்டுநகர்] — **ஶ்ரீகிஷ்ணா** [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு


**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

**ராஜ்** [நீர்கொழும்பு]

**மற்றும் 4 திரைகளில்!**

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

**குழந்தையும் தெய்வமும்**

டைரக்ஷன்: கிஷ்ருண பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் சங்கரப்பிள்ளைக்கு செனட்டராகும் சந்தர்ப்பம்?

கொழும்பு, சனி

திரு.ரி. சங்கரப்பிள்ளையை செனட்டர் பதவிக்கு போட்டியிட நியமிப்பதென தமிழ் காங்கிரஸ்கட்சி முடிவுசெய்திருக்கின்றது.

தமிழரசுக்கட்சி இதுவரை எவரையும் செனட்டர் பதவிக்கு போட்டியிட நியமிக்கவில்லை. அது அரசாங்கக்கட்சி நியமிக்கும் அபேட்சகரை ஆதரிக்க முடிவுசெய்திருக்கின்றது. கடந்த முறை தமிழரசுக்கட்சி அபேட்சகரை அரசாங்கக்கட்சியினர் ஆதரித்தனர்.

இதற்கிடையில் தமிழ்காங்கிரஸ் கட்சி அபேட்சகரை அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த எம். பி.க்களும் பிரமுகர்களும் ஆதரிப்பதற்கு முன்வந்திருப்பதாகவும் அறியப்டுகின்றது. இதன்படி திரு. சங்கரப்பிள்ளை செனட்டராகத் தெரிவு செய்யப்படக்கூடிய சாதகமான சூழ்நிலையிலிருப்பதாகக் கருதப்படுகின்றது.

தமிழ்காங்கிரஸ்-கட்சியின் அபேட்சகரான திரு. சங்கரப்பிள்ளை அக்கட்சியின் கூட்டுக்காரியதரிசிகளில் ஒருவர்.

## 40 ஆண்டுகளுக்குமுன் நவராத்திரிவிழா

### கனக செந்திநாதன் விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

''கடந்த நாற்பது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கலைமகள் விழா கொண்டாடப்பட்ட முறை வேறுவிதமாக இருந்துள்ளது. நவராத்திரி தொடங்கி பத்துநாட்களும் மாணவர்கள் வீடுவீடாகக் கோலாட்டம் அடித்து சுற்றுப்புறங்களிலுள்ளவர்களை மகிழ்வித்து அதனால் பெறும் சன்மானத்தை ஆசிரியர்களுக்கு வழங்கிவந்தனர். அக்காலத்தில் ஆசிரியர்களுக்கு கிடைத்து வந்த ஊதியம் மிகச் சொற்பமாகையால் இவ்விதம் கிடைத்த சன்மானம் அவர்களது வாழ்க்கைக்கும் உதவக்கூடியதாகவிருந்தது. உண்மையான குரு-சிஷ்ய மனப்பான்மை வளரவும் வாய்ப்பளித்தது. மக்களிடையே உண்மையான வழிபாட்டுணர்ச்சி பெருகவும் நவராத்திரிவிழா வழிசெய்தது.''

இவ்வாறு இரசிகமணி கனக செந்திநாதன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற நவராத்திரி கவியரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இக்கவியரங்கில் கவிஞர்கள் இ. நாகராஜன், வி. கந்தவனம், ஆசிச்செல்வன் சுந்தரம்பிள்ளை, அரியாலையூர் ஐயாத்துரை அம்பி ஆகியோர் பங்குபற்றினர்.

நன்றிஉரை தெரிவித்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. கிருஷ்ணபிள்ளை இங்கிலாந்தில் வாழ்ந்த டாக்டர் ஜோன்சனைப் போல எமது நாட்டில் இரசிகமணி கனக செந்திநாதன் இருக்கின்ருர் என்ருர். நாட்டு மக்களுக்குநற்சேவைசெய்து வருவது பாராட்டத்தக்கது.

(நி.)

## ஜெர்மன் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் எம், பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாகவே இங்கு இக்கல்லூரி நிறுவப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

இத்தொழிற் கல்லூரியை பண்ணையில் கோட்டைக்கருகிலிருக்கும் நிலத்தில் கட்டுவதற்கு அங்கீகாரம் அளிக்குமாறு திரு. ஜி. ஜி., நீதி அமைச்சரைக் கோரியுள்ளார். இந்நிலம் நீதி மன்றம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாலேயே திரு. ஜி. ஜி. இவ்விதம் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெசவு நிலையத்துக்கு

### ரூ 6 ஆயிரம்

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கில் ஒரு நெசவு நிலையத்தைஆரம்பிப்பதற்கு தேசிய தொழிற்திட்டஅடிப்படையில் அரசாங்கம் 6000 ரூபா வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட தொகையுடன் நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூகநிலையஉறுப்பினர்களின் முயற்சியினல் ஊர்மக்களிடம் சேகரிக்கப்பட்ட தொகையுடன் சேர்த்து அத்தொகை பத்தாயிரத்தை எடுத்துள்ளது. இதனைக் கொண்டு ஆக்கப்பட்ட சென் மேரிஸ் நெசவு நிலையக் கட்டடம் இம்மாத இறுதியில் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தினல்திறந்துவைக்கப்படுமெனத் தெரிகிறது.

[நி]

## சென்னையில் கண்டேவியா

சென்னை, அக். 14

இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. வை. டி. கண்டேவியா இன்று சென்னை வந்து சேர்ந்தார். நாளைய தினம் அவர் புதுடில்லி புறப்படுவார் என்று தெரிகின்றது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## மட்டக்களப்பு எம். பி. க்கு

### 17-ந் திகதி வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மட்டக்களப்பு மேயரும், முதல் எம். பி. யுமான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. செ. இராசதுரைக்கு வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் வரவேற்பொன்று அளிக்கப்படவிருக்கிறது. தமிழரசு வாலிப முன்னணி உபதலைவர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இந்த வரவேற்புக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட தமிழரசு எம். பி. க்களும், பிரமுகர்களும்பேசுவார்கள்.

[நி]

## சிரமதானம்மூலம் பாலம் திருத்தப்பட்டது

மல்லாவி, சனி

மல்லாவி மறுமலர்ச்சி மன்றத்தின் சிரமதானக்குழு யோகபுரம்இரண்டாம்பகுதியில் சிதைந்து போயிருந்த பாலமொன்றினை சிரமதான இயக்கம் மூலம் சீர் செய்துள்ளது.

வவுனிக்குளம் 1-வது பிரதான வாய்க்காலில் 6-ட கட்டைக்கும், 7-ம் கட்டைக்கும் 357ம், 358ம் இலக்க வளவு காணிகளுக்கிடையில் உள்ள மேற்படி பாலம் கடந்த நான்கு வருடங்களாக வாகனங்களோ, கால்நடைகளோ செல்ல முடியாதவாறு தூர்ந்து கிடந்தது. மேற்படி பாலம் சிதைந்து போயிருந்த காரணத்தால் யோகபுரம் 2-ம் பகுதி விவசயிகள் தங்கள் வயல்களுக்கு கொண்டு செல்லவேண்டிய வாகனங்களை ஒரு மைல் அதிகமான வேறொரு பலத்தின் மூலம் கொண்டுபோக வேண்டியுள்ளது.

மேற்படி பாலத்தை அரசாங்கம் திருத்தித் தருமென்ற நம்பிக்கையை கடந்த நான்கு வருடங்களுள் மக்கள் இழந்துவிட்ட சமயத்தில், மல்லாவி மறுமலர்ச்சி மன்றத்தின் சிரமதானக் குழுவும், தலைவரும் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் விளைவாக 900 ரூபா பெறுமதியான மேற்படி வேலை ஒரே நாளில் பூர்த்தியாக்கப்பட்டது.

மேற்படி சிரமதான இயக்கத்தில் நூற்றுக்கும் அதிகமான பொதுமக்களும், மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். மேற்படி வேலைக்காக திரு. த. மாணிக்கம், திரு. ஐ. சண்முகம்பிள்ளை திரு. சு. புண்ணியலிங்கம் ஆகியோர் [illegible] உழவு யந்திரங்களையும் [illegible] கொடுத்துதவியுள்ளார்கள்.

## நாற்றுக்கு மேலான எறிகுண்டு சம்பவம்

ஹொங்கொங், அக். 14

ஹொங்கொங்கில் இன்று காலை அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது நூற்றுக்குமேலான எறிகுண்டு சம்பவங்கள் இடம் பெற்றன.

அரசாங்க எதிர்ப்பு கோஷ்டியினர் இந்த வன்முறை நடவடிக்கைகளில் இறங்கினார்கள். ஒரு பொலீஸ்காரர் உட்பட சுமார் 21பேர் காயமடைந்தனர்.

பிரிட்டி மந்திரி ஷெப்பர்டு பிரபு இங்கு மேற்கொண்ட சுற்றுப் பிரயாணத்தைத் தொடர்ந்து இந்தக்கலவரங்கள் ஏற்பட்டன.

## 'உணவு நெருக்கடியை மாணவர் உணர வேண்டும்'

வவனியா, சனி

''நாட்டிலுள்ள உணவு நெருக்கடியை அறிந்துபாடசாலையில் உள்ள ஆண், பெண் பிள்ளைகள் சகலரும் பாடசாலையிலோ அல்லது வேறு இடத்திலுள்ள வயலிலோ வேலை செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் பிள்ளைகளுடன் ஆசிரியர்களும் சரிநிகர் சமானமாகவேலை செய்வதை நான் பார்க்க உண்மையில் நாட்டுக்காகத்தான் வர்கள் வாழுகின்றனர் என்ற எண்ணம் எனக்கு உதயமாகின்றது.''

இவ்வாறு வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் சுமார் 15 ஏக்கர் நிலத்தில் நெல்லுக் கொத்தும் வேலை மாணவர்களால்மேற்கொள்ளப்பட்ட போது வவனியா மாவட்ட கல்வி ஆலோசகர் திரு. கனகசபாபதி கூறினர். இவ்விழாவுக்கு பாடசாலையின் அதிபர் திரு. வா. அரியரத்தினம் தலைமைதாங்கினர்.

திரு. கனகசபாபதி தொடந்துர்பேசுகையில் பாடசாலைப்பிள்ளைகள் புத்தகபடிப்பைவிட இவ்வித விவசாயப் பயிற்சியடைவதால் தங்களின் வருங்காலத்தை நல்லமுறையில் அமைத்துக் கொள்ளலாம். என்ருர்.

இந்த வேலையில் சுமார் 400மாணவர்பங்குபற்றினர்

## தனிப்பட்டோரின் வாகன சேவை

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை சீர்கேட்டினல், மீண்டும் தனிப்பட்ட வான்களும், கார்களும் பல பகுதிகளுக்கும் சேவை செய்ய ஆரம்பித்துள்ளன.

நீண்ட நேரம் பஸ்ஸுக்காகக் காத்து நின்து பொறுமையிழக்கும் பிரயாணிகள், தனிப்பட்டவர்களின் வான்களிலும், கார்களிலும் கூடிய கட்டணம் கொடுத்துப் பிரயாணம் செய்கின்றனர்.

போக வேண்டிய இடத்திற்கு பஸ்களிலும் பார்க்க வான்களில் விரைவாகச் செல்லலாம் என்ற காரணத்தினலும், பிரயாணிகள் வானில் செல்ல முற்பட்டுள்ளனர்.

## துப்பாக்கி சண்டை

கெய்ரோ, அக். 14

இன்று காலையில் ஜோர்டானிய படையினருக்கும் இஸ்ரேலிய துருப்புகளுக்குமிடையில் ஜோர்டான் நதியின்மீது துப்பாக்கிச்சண்டை ஏற்பட்டது.

இரு சாராரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர். சேதம் பற்றிய விபரம் கிடைக்கவில்லை.

## இலவசபடக்காட்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமுக நிலையத்தில் இன்று மாலை இலங்கை தகவல் பகுதியினரால் இலவசமாக செய்திப் படங்கள் காண்பிக்கப்படவிருக்கின்றன. பிரதமமந்திரியின் யாழ்ப்பாண விஜயம், பாரதப்பிரதமரின் இலங்கை விஜயம், மருத மடுத் திருவிழா ஆகிய படங்கள் காண்பிக்கப்படும் என்று தெரிகிறது.

## மரண அறிவித்தல்

திருநெல்வேலியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை திருமதி இரத்தினம் வெற்றிவேலு காலமாகிவிட்டார். இவர் முன்னாள் நல்லூர் கிராம சபைத் தலைவர் திரு. வெற்றிவேலுவின் மனைவியும், சர்வலோகநாயகம் [உதவி தொழில் ஆணையாளர், குருநாகலை], சபாநாயகம் [கல்வி வித்தியாதரிசி, கண்டி], நல்லைநாயகம் [இலங்கை நிர்வாக சேவை], செல்வி சாந்தநாயகி [பலாலி ஆசிரிய கலாசாலை], செல்வி சௌபாக்கியநாயகி ஆகியோரின் தாயாருமாவார். திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து அன்னாரது பூதவுடல் ஈமைக்கிரியைக்காக இன்று மாலை 3 மணிக்கு திருநெல்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 2556

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பரிசளிப்பு விழா

செவ்வாய்க்கிழமை 17-10-67 மாலை 6 மணி

குமாரசாமி மண்டபம்

பிரதம விருந்தினர்:

திரு. த. சிவப்பிரகாசபிள்ளையும் பாரியாரும்

பெற்றோர், பழைய மாணவர், அன்பர்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 287

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org